THE HINDU - ENGLISH

Dated: 11. 03. 2025

# Rahul demands discussion on voter lists in Parliament

**The Hindu Bureau**
NEW DELHI



Rahul Gandhi

The Leader of the Opposition in the Lok Sabha, Rahul Gandhi, on Monday said questions were being raised across the country on the sanctity of voter lists, and demanded a discussion on the issue in the Lower House.

"We accept your remarks that the government does not make voter lists. In every Opposition-ruled State, questions are being raised. In Maharashtra, the questions are in black and white," Mr. Gandhi said during Zero Hour in the Lok Sabha.

"The Opposition in one voice is saying that there should be a discussion on voter lists. We accept that the government doesn't make them; you also accept our demand to have a discussion," he said.

Leader of the Opposition in the Rajya Sabha and Congress president Mallikarjun Kharge, after being disallowed to raise the issue in the Upper House, took to X to demand a discussion.

"Given the serious threat these large-scale irregularities pose to the free and fair conduct of elections in our country, it is imperative for the Modi government to allow a comprehensive discussion on the matter in Parliament," Mr. Kharge said on X.

## 'Serious flaws'

In the Lok Sabha, the issue was first raised by Trinamool Congress member Saugata Roy, who said West Bengal Chief Minister Mamata Banerjee had pointed out that voters with the same EPIC numbers were present in Murshidabad and Burdwan constituencies, and Haryana.

Stating that a Trinamool delegation would meet the newly appointed Chief Election Commissioner to flag their concerns, Mr. Roy demanded a thorough revision of the voter lists ahead of the Assembly elections in West Bengal and Assam next year.

"There are some serious flaws. This has been pointed out with respect to Maharashtra, which had inflated voter lists. This was pointed out in Haryana. They are now trying to jump into West Bengal and Assam where elections are due next year," Mr. Roy said. "The Election Commission should answer to the country why some mistakes occurred in the lists."

The Trinamool Congress's Kalyan Banerjee demanded action against the EC for "failing" to conduct fair and transparent elections over the past few years.

He said the "faulty" voter lists were a matter of serious concern and amounted to a breach of Rule 20 of the Conduct of Elections Rules.

DECCAN CHRONICLE
Dated: 11. 03. 2025

# Rahul demands EC rolls debate

DC CORRESPONDENT
NEW DELHI, MARCH 10

The Opposition Congress and the Trinamul Congress on Monday raised the issue of alleged discrepancies in the voters' list in both Houses of Parliament and demanded a detailed discussion. Raising the issue in the Lok Sabha during Zero Hour, Leader of the Opposition Rahul Gandhi demanded a discussion in the House on the issue of voters' lists, on which several political parties have raised certain questions.

THE NEW INDIAN EXPRESS
Dated: 11. 03. 2025

# Rahul demands discussion on voter lists in Lok Sabha

PREETHA NAIR @ New Delhi

LEADER of Opposition Rahul Gandhi on Monday demanded a discussion in the Lok Sabha on the issue of voter lists on which several political parties have raised certain questions.

Raising the issue during Zero Hour in the Lok Sabha, Gandhi said the entire opposition has been demanding a discussion on voter lists. "We accept your remarks that the government does not make voter lists. But we demand a discussion on the issue," the Congress leader said.

"The voter lists are being questioned across the country. Questions have been raised by the opposition in one voice in every state, including Maharashtra," he said.

Echoing the view, Congress MP Priyanka Gandhi Vadra reiterated that the entire opposition in Parliament wants a discussion on the voter list. " The way news of voter list rigging comes out in every election is very dangerous for our democracy. This discussion is very important for the protection of democracy and the Constitution," she wrote in X.

Earlier, Trinamool Congress member Saugata Roy said there were some flaws in the voter lists and West Bengal Chief Minister Mamata Banerjee has pointed out that voters with same EPIC (Electoral Photo Identity Card) numbers were present in Murshidabad and Burdwan parliamentary constituencies and in Haryana.

**Voter lists are being questioned across the country. Questions have been raised by the opposition in every state, including Maharashtra**

Rahul Gandhi

**TMC to meet CEC**

TMC MP Saugata Roy said a party delegation would meet the newly-appointed chief election commissioner to flag concerns regarding the voter lists.

THE HINDU - TAMIL

Dated: 11.03.2025

வாக்காளர் பட்டியலில் உள்ள முரண்பாடு குறித்து

# மக்களவையில் விவாதம் நடத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தல்

■ புதுடெல்லி

"நாட்டில் பல மாநிலங்களில் வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் உள்ளது குறித்து மக்களவையில் விவாதம் நடத்த வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது கட்டம் நேற்று தொடங்கியது. மக்களவை காலை கூடியதும் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார். அப்போது அவர் கூறும்போது, "நாட்டின் பல மாநிலங்களில் வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகள் உள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன. மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் பட்டியலில் பெரும் முரண்பாடுகள் இருந்துள்ளன. இதுகுறித்து மக்களவையில் விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்று அனைத்து எதிர்க்கட்சிகளும் கூறுகின்றன" என்று வலியுறுத்தினார்.

பின்னர் அவர் நாடாளுமன்றத்தை விட்டு வெளியில் வந்ததும், "வாக்காளர் பட்டியல் முரண்பாடுகள் குறித்து மக்களவையில் விவாதம் நடக்குமா?" என்று செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு ராகுல் பதில் அளிக்கையில், "நான் அப்படி நினைக்கவில்லை" என்றார்.

மக்களவையில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி எம்.பி. சுகதா ராய் பேசும்போது, "வாக்காளர் அடையாள அட்டை எண் ஹரியானாவில் இருக்கும் பலருக்கும் மேற்கு வங்கத்தில் இருக்கும் பலருக்கும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இது மிகவும் தீவிரமான பிரச்சினை. இதுபோல் ஒரே எண் 2 மாநிலங்களை சேர்ந்தவர்களுக்கு இருப்பது, மேற்கு வங்கம், அசாம் போன்ற மாநிலங்களில் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலை பாதிக்கும். எனவே, வாக்காளர் பட்டியல் முரண்பாடு குறித்து தலைமை தேர்தல் ஆணையம் மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்றார்.

ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங் பேசும்போது, "தேர்தல் ஆணையமும் மத்திய அரசும் சேர்ந்து போலி வாக்காளர் பட்டியலை தயாரித்து வருகின்றன. மகாராஷ்டிரா, ஹரியானா, டெல்லியில் இதே போல் வாக்காளர் பட்டியலில் முரண்பாடு காணப்படுகிறது. இது நேர்மையான தேர்தலை சீர்குலைக்கும். இது அரசியல் சர்வாதிகாரத்துக்கும் ஊழலுக்கும் வழிவகுக்கும்" என்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக மேற்குவங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் பிரதிநிதிகள், கொல்கத்தாவில் உள்ள தேர்தல் அலுவலகத்துக்கு சென்று புகார் அளித்தனர். வாக்காளர் பட்டியலை நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும். தனித்துவமான அடையாள அட்டைகளுக்கு தனித்தனி எண் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.

முன்னதாக கடந்த 2-ம் தேதி தலைமை தேர்தல் ஆணையம் இதுகுறித்து விளக்கம் அளித்தது. அதில், "2 எண்கள் 2 மாநிலங்களில் ஒன்று போல் இருந்தாலும், சம்பந்தப்பட்ட வாக்காளர் அவருக்கான மாநிலம், தொகுதி, வாக்குச் சாவடியில்தான் வாக்களிக்க முடியும். ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் அந்த அடையாள அட்டையை வைத்து வேறு மாநிலத்தில் வாக்களிக்க முடியாது. எனினும், இதுபோன்ற முரண்பாடுகளை நீக்க ஒவ்வொரு வாக்காளருக்கும் தனித்துவமான அடையாள எண் வழங்குவதற்காக, எரோநெட் இணையதளத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

DAILY THANTHI
Dated: 11. 03.2025

# வாக்காளர் பட்டியல் குளறுபடி பற்றி விவாதம் நடத்த வேண்டும்

## மக்களவையில் ராகுல்காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி, மார்ச்.11-

ஒரே வாக்காளர் அட்டை எண், ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று மக்களவையில் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.



### ராகுல்காந்தி

ஒரு மாநிலத்தில் ஒரு வாக்காளருக்கு வழங்கப்பட்ட வாக்காளர் அட்டை எண், இன்னொரு மாநிலத்தில் வேறு ஒருவருக்கும் வழங்கப்பட்டு இருப்பதாக சமீபத்தில் சர்ச்சை எழுந்தது. இதுபற்றி தேர்தல் கமிஷனில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார் அளித்தது. ஆனால், அதனால் எந்த பிரச்சினையும் இல்லை என்று தேர்தல் கமிஷன் விளக்கம் அளித்தது.

இந்நிலையில், நேற்று நாடாளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி இப்பிரச்சினையை எழுப்பினார். அவர் கூறியதாவது:-

ஒரே வாக்காளர் அட்டை எண் ஒன்றுக்கு மேற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டது பற்றி விவாதம் நடத்த வேண்டும் என்று ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

### விவாதம்

பல மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மராட்டியம் உள்பட ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க்கட்சிகள் ஒரே குரலில் கேள்வி எழுப்புகின்றன. வாக்காளர் பட்டியலை மத்திய அரசு தயாரிப்பது இல்லை என்ற உங்களின் வாதத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், விவாதம் நடத்துமாறு கேட்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### திரிணாமுல் காங்கிரஸ்

முன்னதாக, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சவுகதா ராய், இதே பிரச்சினையை எழுப்பினார். அவர் பேசியதாவது:-

வாக்காளர் பட்டியலில் சில தவறுகள் இருக்கின்றன. ஒரே வாக்காளர் அட்டை எண் கொண்ட வாக்காளர்கள், மேற்கு வங்காளத்தின் முர்ஷிதாபாத், பர்த்வான் ஆகிய நாடாளுமன்ற தொகுதிகளிலும், அரியானா மாநிலத்திலும் இருப்பதாக மேற்கு வங்காள மாநில முதல்-மந்திரி மம்தா பானர்ஜி சுட்டிக் காட்டினார்.

புதிய தலைமை தேர்தல் கமிஷனரை திரிணாமுல் காங்கிரஸ் குழு சந்தித்துள்ளது. மராட்டியம், அரியானா ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே இந்த தவறு சுட்டிக் காட்டப்பட்டது. தற்போது, அடுத்த ஆண்டு தேர்தல் நடக்க உள்ள மேற்கு வங்காளத்திலும், அசாமிலும் இந்த தவறை செய்கிறார்கள்.

எனவே, வாக்காளர் பட்டியலை முழுமையாக மறு ஆய்வு செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியலில் ஏன் தவறு நடக்கிறது என்று தேர்தல் கமிஷன் விளக்கம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

DINAMALAR

Dated: 11.03.2025

# மது பெட்டிக்கு ரூ.50 கமிஷன் வழங்கியது அம்பலம் ஓட்டுக்கு பணம் வழங்குவதை தடுக்க முயற்சி

**சென்னை, மார்ச் 11–**

மதுபான ஆலை உரிமையாளர்களுக்கு சொந்தமான இடங்கள் மற்றும் 'டாஸ்மாக்' தலைமை அலுவலகத்தில் நடத்திய சோதனையின் வாயிலாக, பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களுக்கு, ஒரு மது பெட்டிக்கு, 50 ரூபாய் கமிஷன் வழங்கியது, அமலாக்கத் துறை சோதனையில் அம்பலமாகி உள்ளது.

வரும் சட்டசபை தேர்தலில், ஓட்டுக்கு பணம் கொடுப்பதை தடுக்கும் முயற்சியாகவே, இந்த சோதனை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து, டாஸ்மாக் வட்டாரங்கள் கூறியதாவது:

தமிழக அரசு, டாஸ்மாக் நிறுவனம் வாயிலாக, 2003ல் இருந்து நேரடியாக மதுபான சில்லரை விற்பனையில் ஈடுபட்டுள்ளது. இதனால், அரசுக்கு அதிக வரி வருவாய் கிடைக்கிறது.

அதை பயன்படுத்தி, இலவச திட்டங்கள் துவக்கப்பட்டன. ஆரம்பத்தில் எந்த நிறுவனத்தின் மது வகைகள் அதிகம் விற்பனையாகிறதோ, அதனிடம் இருந்து, அதிக மது வகைகள் கொள்முதல் செய்யப்பட்டன.

பின், எந்த கட்சி ஆட்சியில் உள்ளதோ, அந்த கட்சிக்கு வேண்டிய நிறுவனங்களிடம் இருந்து, அதிக மது வகைகள் வாங்கப்பட்டன. இதில், 90 மி.லி., 'குவார்ட்டர்' மது பாட்டிலுக்கு, 20 – 25 ரூபாய் செலவாகிறது. அதன் மேல் விதிக்கப்படும் வரி உள்ளிட்ட செலவுகளால், 140 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே தான், பீர் உட்பட அனைத்து மது தயாரிப்பு செலவுக்கும் பொருந்தும்.

ஒரு பெட்டியில், 48 குவார்ட்டர் பாட்டிலும், பீர் பெட்டியில் 12ம் இருக்கும். டாஸ்மாக் கொள்முதல் செய்யும், ஒவ்வொரு மதுபான பெட்டிக்கும், தலா 40 – 50 ரூபாய் ஆட்சியாளர்களுக்கு கமிஷனாக வழங்கப்படுகிறது. கடந்த 2017ல் இருந்து, கட்சி ஆதரவு நிறுவனத்திடம் அதிக கொள்முதல் என்ற நிலை மாறியது.

ஒரு பெட்டிக்கு நிர்ணயம் செய்துள்ள பணத்தை, எந்த நிறுவனம் கமிஷனாக வழங்குகிறதோ, அதனிடம் இருந்தே அதிக மது வகைகள் வாங்கப்பட்டன. இன்று வரை இதே நிலை தொடர்கிறது.

வேறு எந்த துறையில் இருந்தும், உடனுக்குடன் இவ்வளவு தொகை கமிஷனாக கிடைப்பதில்லை. தேர்தலில் வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்ய, மது பெட்டியால் கிடைக்கும் கமிஷனை கட்சியினர் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

இதுதொடர்பாக, அமலாக்க துறைக்கு புகார்கள் சென்றன. அதன் அடிப்படையிலேயே சோதனை நடந்துள்ளது.

தற்போது, சோதனை நடந்த நிறுவனங்களிடம் இருந்து தான், கடந்த எட்டு ஆண்டுகளில், டாஸ்மாக் அதிக மது வகைகள் கொள்முதல் செய்திருப்பதும், ஒரு பெட்டிக்கு, 50 ரூபாயை கமிஷனாக, அந்த நிறுவனங்கள் வழங்கி இருப்பதும் அம்பலமாகி உள்ளது.

வரும் சட்டசபை தேர்தல் சமயத்தில், வாக்காளர்களுக்கு கட்சியினர் ஓட்டுக்கு பணம் வழங்குவதை தடுக்கும் முயற்சியாகவும், இந்த சோதனை நடந்திருப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

DINA KARAN

Dated: 11.03.2025

வாக்காளர் பட்டியல் மோசடி

# தேர்தல் ஆணையம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மக்களவையில் எம்பிக்கள் போர்க்கொடி

புதுடெல்லி, மார்ச் 11: மக்களவையில் நேற்று பூஜ்ய நேரத்தில் பேசிய எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, "வாக்காளர் பட்டியலில் மோசடி நடந்தது குறித்து விவாதிக்க வேண்டுமென அனைத்து எதிர்க்கட்சிகளும் வலியுறுத்துகின்றன. வாக்காளர் பட்டியலை ஒன்றிய அரசு தயாரிக்கவில்லை என்ற கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனாலும் இந்த விவகாரத்தில் விரிவான விவாதம் அவசியம். ஒரே எண்ணுடன் பல வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பது குறித்து நாடு முழுவதும் கேள்வி எழுப்பப்படுகிறது. மகாராஷ்டிரா உட்பட ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க்கட்சிகள் ஒற்றை குரலாக ஒலிக்கின்றன" என்றார்.

திரிணாமுல் காங்கிரஸ் மூத்த எம்பி கல்யாண் பானர்ஜி பேசுகையில், "வாக்காளர் பட்டியலில் தவறு நடந்திருப்பது தேர்தல் நடத்தை விதிகள் பிரிவு 20ஐ மீறும் செயல். இந்த மோசடி கடந்த சில ஆண்டுகளாகவே நடந்துள்ளது. இதற்கு முன்பு இப்படி நடந்ததில்லை. எப்படி மேற்கு வங்கத்தில் வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்தது? குஜராத், அரியானாவில் இருந்து வாக்காளர்கள் வந்துள்ளார்களா? இதை பொறுத்துக் கொள்ள முடியாது. எப்போதும் வெளிப்படையாக நேர்மையாக தேர்தலை நடத்துவதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. ஆனால் கடந்த சில ஆண்டாக அப்படி நடக்கவில்லை என்பது உறுதியாகி உள்ளது. இதற்கு காரணமான தேர்தல் ஆணையம் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.



திரிணாமுல் காங்கிரஸ் எம்பி சவுகதா ராய் பேசுகையில்,"வாக்காளர் பட்டியலில் ஒரே மாதிரி அடையாள அட்டை எண் கொண்ட பல வாக்காளர்கள் இருப்பது குறித்து மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையரை நேரில் சந்தித்து எங்கள் கவலைகளை வெளிப்படுத்தி உள்ளோம். மேலும் வாக்காளர் பட்டியலை, குறிப்பாக அடுத்த ஆண்டு தேர்தல் நடக்க உள்ள மேற்கு வங்கம், அசாமில் முழுமையாக ஆய்வு செய்ய கோரிக்கை விடுத்துள்ளோம். இது ஒரு முக்கியமான குறைபாடு" என்றார்.

### சபாநாயகர் ஓம்பிர்லாவுடன் ராகுல், பிரியங்கா சந்திப்பு

மக்களவையில் வாக்களர் பட்டியல் குறித்து பேசிய ராகுல்காந்தி, இந்த முறைகேடு தொடர்பாக விவாதம் நடத்த கோரிக்கை விடுத்தார். அதன்பிறகு சபாநாயகர் ஓம்பிர்லாவை அவரது அறைக்கு சென்று ராகுல்காந்தி சந்தித்தார். இந்த சந்திப்பின் போது பிரியங்கா காந்தியும் உடன் இருந்தார்.


DINAMANI
Dated: 11.03.2025

# மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

புது தில்லி, மார்ச் 10: போலி வாக்காளர் அட்டை விவகாரம், இந்தியாவில் வாக்கு சதவீதத்தை உயர்த்த அமெரிக்கா நிதி அளித்த விவகாரம் உள்ளிட்டவை மீது விவாதம் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மாநிலங்களவையிலிருந்து திங்கள்கிழமை வெளிநடப்பு செய்தன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதி திங்கள்கிழமை தொடங்கிய நிலையில், போலி வாக்காளர் அட்டை விவகாரம், அமெரிக்க நிதியுதவி குறித்து விவாதிக்க அனுமதிக்கக் கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது குறித்து பேச எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அனுமதி கோரினார்.

### போலி வாக்காளர் அட்டை விவகாரம்



மாநிலங்களவையில் திங்கள்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள்.

அவையை அப்போது வழிநடத்திய ஹரிவன்ஷ் அதற்கு அனுமதி மறுத்ததோடு, 'மாநிலங்களவையின் அனைத்து அலுவல்களையும் ஒத்திவைத்துவிட்டு போலி வாக்காளர் அட்டை விவகாரம், அமெரிக்க நிதி உள்ளிட்ட விவகாரங்கள் மீதான விவாதத்துக்கு அனுமதிக்கக் கோரி விதி எண் 267-இன் கீழ் திமுக எம்.பி.க்கள் திருச்சி சிவா, பி.வில்சன், மதிமுக பொதுச் செயலர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி.க்கள் சந்தோஷ் குமார், பி.பி.சுனீர், உள்பட மேலும் சில எதிர்க்கட்சிகள் தரப்பில் 12 நோட்டீஸ்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன' என்று குறிப்பிட்டு விவாதத்துக்கு அனுமதி மறுத்தார்.

இதற்கு, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அவையில் அமளியில் ஈடுபட்டனர். பின்னர், விவாதத்துக்கு அனுமதி மறுத்ததைக் கண்டித்தும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

அப்போது பேசிய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா, 'அவையில் அனைத்து விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது. ஆனால், இந்த விவாதத்துக்கென சில விதிமுறைகள் உள்ளன. குறுகிய விவாதம் மற்றும் நீண்ட நேர விவாதத்துக்கென சில நடைமுறைகள் உள்ளன. இந்த விதிமுறைகள் எதையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் படிப்பதில்லை. அவையில் அடுத்த 10 நாள்களுக்கு மத்திய பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற உள்ளது. அப்போது, எதிர்க்கட்சிகள் அவர்களின் விவகாரங்களை எழுப்ப அனுமதிக்கப்படுவர். ஆனால், இதுபோன்ற முறையான விவாதத்தை எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை. மத்திய அரசு மீது தவறான பிம்பத்தை ஏற்படுத்தவே அவர்கள் முயற்சிக்கின்றனர். அவையிலிருந்து அவர்கள் வெளிநடப்பு செய்தது, பொறுப்பற்ற செயல். நாடாளுமன்றம் மற்றும் ஜனநாயகத்தை அவமதிக்கும் செயல்' என்றார்.

**போலி வாக்காளர் அட்டை விவகாரம்:** வெவ்வேறு மாநிலங்களில் உள்ள சிலருக்கு ஒரே மாதிரியான வாக்காளர் அடையாள எண்கள் வழங்கப்பட்டிருப்பது, நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'ஆளும் பாஜகவுக்கு ஆதரவாக வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்களைச் சேர்க்க தேர்தல் ஆணையம் உடந்தையாக இருந்துள்ளது' எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இதை மறுத்த தேர்தல் ஆணையம், 'வெவ்வேறு மாநிலங்களில் ஒரே வாக்காளர் அடையாள எண் உடையவர்கள் போலி வாக்காளர்கள் அல்லர்.

சிலரின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (இபிஐசி) எண்கள் ஒரே மாதிரியாக இருக்கலாம். ஆனால், அவர்கள் பிறந்த தேதி, தொகுதி மற்றும் வாக்குச்சாவடி என மற்ற தகவல்கள் வேறுபட்டிருக்கும். இந்த குழப்பத்துக்கு அடுத்த 3 மாதங்களில் தீர்வு காணப்படும். வருங்காலத்தில் இதுபோன்ற குழப்பங்களைத் தவிர்க்க பதிவு செய்துள்ள வாக்காளர்களுக்கு வெவ்வேறு இபிஐசி எண் வழங்கப்படும்' என்று தெரிவித்தது.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்திருந்தன.

DINA MANI

Dated: 11.03.2025

# வாக்காளர் பட்டியல்: விவாதம் தேவை

## ராகுல் காந்தி வலியுறுத்தல்



புது தில்லி, மார்ச் 10: 'மகாராஷ்டிரம், ஹரியாணா தேர்தல்களில் வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடைபெற்றாக குற்றச்சாட்டு எழுந்த விவகாரம் குறித்து மக்களவையில் விவாதம் நடத்த வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடரின் 2-ஆம் கட்ட அமர்வு திங்கள்கிழமை தொடங்கியது. இந்நிலையில், மக்களவையில் திங்கள்கிழமை அமர்வில் உடனடி கேள்விநேரத்தின்போது இதுகுறித்து ராகுல் காந்தி முன்வைத்த கோரிக்கையில், 'வாக்காளர் பட்டியல் விவகாரம் குறித்து ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் விவாதத்தைக் கோருகின்றன. வாக்காளர் பட்டியலை அரசு தயாரிப்பது இல்லை என்ற வாதத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்த விவகாரம் குறித்து அவையில் நிச்சயம் விவாதம் நடத்த வேண்டும்.

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளது. மகாராஷ்டிரம் உள்பட அனைத்து மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் குறித்து எதிர்க்கட்சிகள் ஒரே குரலில் கேள்வி எழுப்பியுள்ளன' என்றார்.

**வாக்காளர் பட்டியலில் முழுத் திருத்தம்:** முன்னதாக, திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. செளகதா ராய் பேசுகையில் 'வாக்காளர் பட்டியலில் மோசமான குறைபாடுகள் உள்ளன. மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மற்றும் வர்தமான் மக்களவைத் தொகுதிகளிலும், ஹரியாணாவிலும் ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண்களைக் கொண்ட வாக்காளர்கள் இருப்பதை முதல்வர் மம்தா பானர்ஜி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து புகாரளிக்க, புதிதாகப் பொறுப்பேற்ற தலைமைத் தேர்தல் ஆணையரை திரிணமூல் பிரதிநிதிகள் சந்தித்தனர். மேற்கு வங்கம் மற்றும் அஸ்ஸாமில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பேரவைத் தேர்தல்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல்கள் முழுமையாகத் திருத்தப்பட வேண்டும். வாக்காளர் பட்டியலில் ஏன் தவறுகள் ஏற்பட்டன என்பதற்கு தேர்தல் ஆணையம் நாட்டு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும்' என்று கூறினார்.